சப்ரகமுவ மாகாண கல்வித்திணைக்களம்
வாராந்த பாடசாலை

பாடம் : சித்திரம்

வாரம் : ஆகஸ்ட் 03

தரம் : 09

தொகுப்பு : செல்வி.S.லுக்ஷனி
இ/நிவி/ஹவுப்பே த.வி

**தேர்ச்சி** : **வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டு சித்திரம், சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப்பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம்** : **வரலாற்று ரீதியான கட்டட நிர்மாணங்கள் சார்ந்த கலையம்சங்களை அறிவார்.**

**செயற்பாடு** : **“வாகல்கட நிர்மாணிப்புக்களை மதிப்பிடுவோம்”**

**ஒப்படை** : **பின்வரும் வாசிப்புப் படிவத்தினை நன்கு வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.**

## வாசிப்புப் படிவம்

**வாகல்கடம்**

தாதுகோபத்துடன் இணைந்து அதன் நாற்றிசையிலும் அமைக்கப்பட்ட சிறப்புவாய்ந்த கட்டட நிர்மாணிப்பென இதனைக் குறிப்பிடலாம் வாகல்கடம் ‘‘ஆயக்க’’, ‘‘ஆயிக்க’’ எனும் பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன. தாதுகோபத்துக்கு வலிமை, அழகு என்பன தோற்றுவிக்கப்படுகின்றதெனக் கருதலாம். தாதுகோபத்தின் நாற்றிசைகளிலும் மலராசனத்துடன் இணைந்து இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.வாகல்கடத்தின் அடித்தளம் கல்லால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மேற்பகுதியில் காணப்படும் விமானங்கள் செங்கல்லினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. குல்லால் அமைக்கப்பட்ட கீழ் பகுதியில் மணியுருக்கட்டு (பொரதம்) எனப்படும் பகுதிகள் பல உள்ளன. யானை, மகரம், முயலகன்கள், அன்னம் ஆகிய விலங்குருக்களை இவை கொண்டுள்ளன. செங்கல்லால் அமைக்கப்பட்ட சில வாகல்கடங்களில் மூன்று விமானங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் புத்தரின் உருவம், தெய்வ உருவம் என்பன வைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. வாகல்கடத்தின் இருபுரத்தில் விசித்தரமான செதுக்கல்களாலான கற்றூண்கள் காணப்படுகின்றன. இவை கல்பலதா, ஜீவன் விருட்சம், சுயாதீனமான விலங்கு அலங்காரங்களைக் கொண்டுள்ளன. அக் கற்றூண்கள் மீது யானை, குதிரை, பசு, சிம்மம் எனும் உருவங்கள் உள்ளன. இவை நான்கு திசைகளையும் குறிப்பதாக நம்பப்படுகிறது.

**பல காலங்களுக்குரிய உயர் பண்புகளைக் கொண்ட வாகல்கடங்கள்**

**அநுராதபுர காலம்**

* மிகிந்தலை கண்டக சைத்தியத்தின் வாகல்கடம்


**பொலனறுவைக் காலம்**

* ரன்கொத் விகாரையின் வாகல்கடம்





மிகிந்தலை கண்டக சைத்தியத்தின் வாகல்கடம்





ரன்கொத் விகாரையின் வாகல்கடம்

**வட்டதாகே**

தாதுகோபுரமொன்றின் பாதுகாப்பைக் கருதி தாதுகோபத்தை கற்றி அமைக்கப்படும் மனை வட்டதாகே எனப்படும். தூபகர, வேதியகர, சேகெய எனும் பெயர்களால் இது அழைக்கப்படுகின்றது. இலங்கை பௌத்த கட்டட நிர்மாணிப்பின் இன்னுமொரு சிறந்த நிர்மாணிப்பாக உள்ள வட்டதாகே சிறிய தாதுகோபங்களைச் சுற்றியே நிர்மாணிக்கப்பட்டுள்ளன. வட்டவடிவ அமைப்பைக் கொண்ட இதன் கூரை தாதுகோபத்தக்குப் பாதுகாப்பான முகடொன்றாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதைக் கருதலாம். முகட்டை தாங்கி நிற்கும் காற்றூன்கள் மிக நுணுக்கமான செதுக்கல் வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளன. இலங்கையில் முதன்முதலாக அமைக்கப்பட்டது தூபாராம வட்டதாகேயாகும்.



தூபாராம வட்டதாகே



திரியாய வட்டதாகே



மெதிகிரிய வட்டதாகே



பொலன்னறுவை வட்டதாகே

**பல காலங்களுக்குரிய உயர்க் கலைப்பண்புகளைக் கொண்ட வட்டதாகே நிர்மாணிப்புக்கள்**

**அநுராதபுரக் காலம்**

* திரியாய வட்டதாகே

**பொலனறுவைக் காலம்**

* மெதிகிரிய வட்டதாகே
* பொலன்னறுவை வட்டதாகே

**வினாக்கள்**

1.வாகல்கடம் என்பது எதனைக் குறிக்கின்றது?

2.வாகல்கடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விலங்குருவங்கள் எவை?

3.உயர்வான கலைப்பண்புகளுடைய வாகல்கடம் உள்ள இடத்தைக் குறிப்பிடுக.

4.தற்போது பாதுகாக்கப்பட்டுள்ள பொலன்னறுவைக் காலத்து வாகல்கடம் ஒன்றைக் குறிப்பிடுக.

5.வாகல்கடத்துக்கு கூறப்படும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.

6.வட்டதாகே என்றால் என்ன?

7.இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட முதல் வட்டதாகே எது?

8.தற்போது இலங்கையில் காணப்படும் வட்டதாகே சிலவற்றைக் குறிப்பிடுக.